மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் பாஸ புத்தகத்தின் கடைசிப் பக்கங்களைப் புரட்டிப் பார்க்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஆ. பரந்தாமன்: தலைவரவர்களே, கிராமப்புறங்களில் இருக்கும் கிராம அதிகாரிகள் பல நேரங்களில் சரியான புள்ளி விவரம் தராமல் அதிகத் தொகையை வசூலிக்கிறார்கள் விவசாயிகளிடத்திலே. அதைத் தவிர்ப்பதற்காக விவசாயிகளே நேரடியாக வட்டாட்சித் தலைவரிடம் அந்தக் கடனைச் செலுத்துவதற்கு வழிவகை வகுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, இப்பொழுது கொடுக்கப்படும் பாஸ் புத்தகத்தில் எவ்வளவு வரி கொடுக்க வேண்டுமென்ற முழு விவரங்களை எழுதிக் கொடுத்து விடுகிறோம். எனவே, அதிகமாகக் கொடுக்க வேண்டிய கட்டாயம் இருக்காது. இதைத் தடுப்பதற்கு இந்த பட்டா பாஸ் புத்தகம் உபயோகமாக இருக்கும்.

திரு. த. சோணையா: தலைவரவர்களே, இந்தப் பாஸ் புத்தகத்திலே அவர்களுக்கிருக்கும், பட்டாவிலிருந்து கொண்டிருக்கும் நிலங்களை இன்னொருவருக்கு விற்றுவிட்டால் சப்ரிஜிஸ்தார் ஆபீசர் மூலமாகப் பட்டா புத்தகத்தில் பதிகின்ற முறை கொண்டுவரப்படுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, அப்படி விற்றால் அதற்கான குறிப்புகளோடு தாசில்தாருக்கு மனுச்செய்து வேறு பாஸ் புத்தகம் வாங்கிக்கொள்ளலாம்.

நகர்ப்புற குத்தகைதாரர் பாதுகாப்புச் சட்டத்தை விரிவுபடுத்தல்

* 320 வினா—**திரு. ச. சங்குமுத்து தேவர்:** மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விக்கிரமசிங்கபுரம், சிவந்திபுரம் ஆகிய கிராமங்களுக்கு சிட்டி டெனன்ட்டு புரொடெக்ஷன் (நகர்ப்புற குத்தகைத்தாரர் பாதுகாப்பு) சட்டத்தை விஸ்தரிக்கவேண்டும் எனக்கோரி இந்த அரசுக்கு மனுக்கள் வந்துள்ளனவா?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

1973 மார்ச் 10]

திரு. ச. சங்குமுத்து தேவர்: தலைவரவர்களே, விக்கிரமசிங்கபுரம், சிவந்திபுரம் ஆகிய கிராமங்கள் மைனர் பஞ்சாயத்து, டவுன் பஞ்சாயத்துக் கிராமங்களாக இருக்கின்றன. முன்பு இனும் கிராமங்களாக இருந்த அவை பூ வும் இனும் ஒழிப்புச் சட்டத்தின்மூலம் எடுக்கப்பட்டவை. அங்கு குடியிருக்கின்ற ஏழை மக்கள் நிலத்திலிருந்து வெளியேற்றம் செய்யப்படுகிறார்கள். எனவே இம்மாதிரி நகரங்களுக்குச் சட்டம் கொண்டுவந்ததைப்போன்று, இனும் கிராமங்களாக இருக்கக்கூடிய பஞ்சாயத்துக்களுக்காவது சட்டம் கொண்டு வந்தால் நலமாக இருக்கும், அதற்கு அரசு உத்தரவு பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, மூலக் கேள்வி சிட்டி டெனன்ட்டு புரொடக்ஷன் ஆக்ட் அங்கு விஸ்தரிக்கப்படுமா என்பது. அதற்கு, இல்லை என்று சொன்னேன். குடியிருப்புகளைக் காலி செய்வதற்காகக் கூறுகிறார்கள். அநேகமாக உயர்நீதி மன்றத்தில் வழக்கிலே இருக்கும் கிராமங்களைப் பற்றி (குறுக்கீடு) சுப்ரீம் கோர்ட்டு தள்ளுபடி செய்தால், குடியிருப்பு பாதுகாப்புச் சட்டம் ஏற்கனவே கொண்டுவரப்பட்டிருக்கிறது, அது பாதுகாப்பாக இருக்கும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, நாகர்கோயில் போன்ற நகரங்களில், இந்த சிட்டி டெனன்ட் புரொடக்ஷன் ஆக்டின் எல்லா வகுப்புகளும் விரிவுபடுத்தப்படவில்லை. ஆகவே, முழுமையாக விரிவுபடுத்த அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, இந்தப் பிரிவைத் தமிழ்நாடு முழுதுமுள்ள எல்லா நகராட்சிகளுக்கும் விரிவுபடுத்தியாகி இருக்கிறது.

திரு. ச. சங்குமுத்து தேவர்: தலைவரவர்களே, இப்படி இனும் கிராமங்களில் அரசு பக்கத்திற்கு அனுகூலமாகத் தீர்ப்பளிக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும் கூட, தஞ்சை மாவட்டத்திலே அடிமனைப் பட்டா வழங்குவதைப்போன்று திருநெல்வேலி மாவட்டத்திற்கும் இவர்களுக்கும் வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, விரைவில் அதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும்.

சட்டமன்றப் பேரவை LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS